## <u>சாட்சிகளின் வாக்குமூலம்</u>

பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.

பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

**இ.ம.எண்.337/2024 in இ.ம.எண்.410/2014 in அ.வ.எண். 287/2012**

<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்</u>

<u>வாக்குமூலம் – நீ.ம.சா–2</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தனசேகரன் | மதம் | : | இந்து |
| த/க/பெ. | : | மாரப்பன் | தொழில் | : | வட்ட சார் ஆய்வாளர் |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | பல்லடம் | மாவட்டம் | : | திருப்பூர் |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2025ஆண்டு மார்ச் மாதம் 21ம் நாள் சாட்சியம்.

---

<u>**முதல் விசாரணை**</u>

1. நான் பல்லடம் தாலுக்கா அலுவலகத்தில் நிலஅளவை பிரிவில் வட்ட சார் ஆய்வாளராக பணிபுரிகிறேன். அ.வ.எண்.287/2012 வழக்கில் இ.ம.எண்.410/2014 என்ற மனுவில் நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் திரு.கே.கோபாலகிருஷ்ணன் அவர்கள் நீதிமன்ற பணிப்பாணையின் படி என்னை நில அளவை செய்வதற்கு அழைத்தார். அதன் படி நான் கடந்த 12.08.2023 தேதியில் நீதிமன்ற ஆணையருடன் சென்று மனு சொத்தினை பார்வையிட்டு வருவாய் ஆவணங்களின் படியும், பணிப்பாணை சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தினை அளவீடு செய்து நான் 2 வரைபடங்கள் தயார் செய்து நீதிமன்ற ஆணையரிடம் ஒப்படைத்தேன்.

2. இந்த வழக்கில் நான் தாக்கல் செய்த வரைபடங்கள் சம்பந்தமாக சாட்சியம் அளிப்பதற்கு கடந்த 13.03.2025 அன்று இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டது. அதன் படி கடந்த 13.03.2025 அன்று நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்திருந்தேன். அன்றைய தினம் நீதிமன்ற ஆணையர் சாட்சியம் அளிக்க கால அவகாசம் கேட்டதால் நான், இன்றைய தினம்

சாட்சியம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டதன் பேரில் நான் இன்று சாட்சியம் அளிக்கிறேன்.

<u>மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் பொதுவாக சொத்தினை அளவீடு செய்யும் போது உரிமை மூல ஆவணங்ளை பார்த்து தான் அளவீடு செய்வேன் என்றால் பொதுவாக அவ்வாறு அளப்போம். நீதிமன்றம் சம்பந்தப்பட்ட வழக்குகளில் நீதிமன்ற பணிப்பாணையின் படி அளப்போம். இந்த மனுசொத்தினை அளவீடு செய்யும் போது உரிமை மூல ஆவணங்களை நான் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. எனது முதல் வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள நடைமுறை தடத்தின் கிழபுறம் மனுதாரர்கள் பூமியும், மேல்புறம் 1, 2 எதிர்மனுதாரர்கள் பூமியும் உள்ளது என்றால் சரிதான்.

2. நான் எனது முதலாவது வரைபடத்தில் 551/2 என்று குறிப்பிட்டுள்ள இடம் நடைமுறையில் இல்லை என்றால் சரிதான். மேற்படி வண்ணமிடப்படாமல் 551/2 என்று காட்டப்பட்டுள்ள இடம் 1வது எதிர்மனுதாரரின் அனுபவத்தில் உள்ள பூமி என்றால் சரிதான். 550/1 எ காலை பூமியும் 1வது எதிர்மனுதாரரின் அனுபவத்தில் உள்ள பூமி என்றால் சரிதான்.

3. நான் அலுவலகத்திலிருந்து புல வரைபடத்தினை கொண்டு வந்துள்ளேனா என்றால் இல்லை. எனது முதல் வரைபடத்தில் 551/1 காலையில் பிங்க் நிறத்தில் காட்டப்பட்டுள்ள 1, 2 எதிர்மனுதாரர்களின் பூமியின் மேல்புற எல்லை அளவீடு தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது உள்ளது என்றால் சரிதான். நடுவில் ஒரு கல் இருந்தது அது வரை உள்ள அளவீடு மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. கல்லுக்கு வடபுறம் உள்ள 68.8 மீட்டர் குறிப்பிடாமல் விடுபட்டுள்ளது.

4. 550 மற்றும் 551 காலைகள் எப்போது உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் 1985 ஆம் ஆண்டு நிலஉடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் செய்யப்பட்டது. அவ்வாறு 1985 ஆம் ஆண்டு நிலஉடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் செய்யப்பட்டது என்பதற்கு ஆவணம் எதுவும் கொண்டுவந்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றும் மனுதாரருக்கு சாதகமாக சொல்வதற்காக அவ்வாறு சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. நான் தவறான வருவாய் துறை ஆவணங்களின் அடிப்படையில் வரைபடம் தயார் செய்து கொடுத்துள்ளேன் என்றும், எனது வரைபடங்களும் அதன் அடிப்படையில் நீதிமன்ற ஆணையர் தயார் செய்த அறிக்கையும் நிராகரிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல. நான் தவறாக எல்லை நிர்ணயித்துள்ளேன் என்றால் சரியல்ல. வரைபடத்தில் எங்கெங்கு எல்லை கற்கள் உள்ளது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வரைபடங்கள் தவறு என்றால் சரியல்ல.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் தயார் செய்துள்ள வரைபடங்களுக்கு அடிப்படையான புல வரைபடங்களையும், எப்போது உட்பிரிவு செய்யப்பட்டது என்பதற்கான ஆவணங்களையும் தாக்கல் செய்ய முடியும் என்றால் சரிதான்.

புல வரைபடங்கள் மற்றும் ஆவணங்கள் சமர்பிப்பதற்கு கால அவகாசம் கேட்டதால் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.03.21 18:22:05 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.